Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 325/2022 DW-1**

Name : செல்வராணி
Father / Husband name : ராஜ்குமார்
Village : கள்ளக்குறிச்சி
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.09.2025

Complainant present. Both side counsel present.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கின் காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மாடூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பணிபுரிகிறேனா என்றால் பணிபுரிகிறேன். மேற்படி முகவரிக்கு கடிதம் அனுப்பினால் எனக்கு கடிதம் வரும் என்றால் சரிதான். ம.சா.ஆ. 8 ல் உள்ள விலாசம் நான் பணிபுரியும் பள்ளியின் விலாசம் என்றால் சரிதான். மேற்படி முகவரிக்கு கடிதம் வந்ததா என்றால் இல்லை. ம.சா.ஆ. 8 ல் உள்ள குறிப்பு என்ன என்றால் இந்த நபர் வாங்க மறுத்துவிட்டதால் கடிதம் திருப்பப்பட்டுள்ளது, தபாலை நான் வாங்க மறுக்கவில்லை. எனக்கும் போஸ்ட் மேனுக்கும் விரோதம் இல்லை என்றால் சரிதான். சட்ட அறிவிப்பை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

2. எனது வங்கி கணக்கில் எனது செல்போன் எண்ணை சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கின் காசோலையை நான் புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்பது தான் எனது வாதம் என்றால் சரிதான். நான் கொடுக்காத காசோலைக்கு புகார் வழக்கு கொடுத்துள்ள நிலையில் இதுகுறித்து புகார்தாரர் மீது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை, இந்த வழக்கின் சம்மன் வந்தபிறகு தான்

வழக்கு பற்றி தெரியவந்தது. சம்மன் எந்த வருடம் வந்தது என்றால் 2021 ம் வருடம் என்மீது வாரண்ட் உள்ளதாக வழக்கறிஞர் கூறினார். அதன்பிறகு புகார்தாரரின் மீது காவல் நிலையத்தில் புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் நடக்கும்போது வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். அது எந்த வருடம் என்றால் 2019.

3. 2021 ல் முதன் முதலில் திண்டிவனத்திலிருந்து வாரண்ட் வந்தபோது வழக்கு பற்றி தெரியவந்தது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல, திண்டிவனம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்துவருவது அப்போது தான் தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு 2019 ம் வருடம் தெரியவந்தது என்றால் சரிதான். இன்றைய தேதிவரை புகார்தாரர் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் எடுக்கவில்லை. எனது கணவர் காவல்துறையில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். புகார்தாரர் பாலு சின்னசேலத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் எங்கு இருந்தார் என்றால் புகார்தாரர் மற்றும் குடும்பத்தார் பற்றி தெரியாது. புகார்தாரர் சின்னசேலத்தில் இல்லாதது எனக்கு எப்படி தெரியும் என்றால் புகார்தாரர் மற்றும் குடும்பத்தார் பற்றி தெரியாது. எனது காசோலையை இரண்டு முறை வங்கியில் செலுத்திய விவரம் நான் எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் நான் வங்கிக்கு சென்றபோது கோவிந்தசாமி என்பவர் கசோலை மூலம் பணத்தை எடுத்துக்கொண்டார். கோவிந்தசாமி யார் என்றால் எனது உயர்அதிகாரி, அவர் உதவி கல்வி அலுவலர்.

4. மேற்படி விவரத்தை வங்கியில் என்னை அழைத்துசொன்னார்களா என்றால் இல்லை, எனது வங்கி கணக்கில் பணமில்லாததால் நான் வங்கிக்கு சென்று விசாரித்தபோது சொன்னார்கள். மேற்படி விவரம் எந்த வருடம் நடந்தது என்றால் 2018 ம் வருடம் மே மாதம். அதன்பின்னர் எனது வங்கி கணக்கை

சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். எப்போது சரிபார்த்தேன் என்றால் ஒவ்வொரு மாதமும் சரிபார்ப்பேன். அவ்வாறு ஒவ்வொரு மாதமும் சரிபார்க்கும்போது யார் யார் காசோலை மூலம் பணம் எடுத்துள்ளார்கள் என்பது தெரியவரும் என்றால் சரியல்ல, நான் மினிஸ்டேட்மன்ட் மூலம் சரிபார்ப்பேன். நான் வங்கிக்கு சென்று இதுநாள் வரை எனது வங்கி கணக்கை சரிபார்க்கவில்லை என்றால் சரிதான், தற்போது போன் செயலி மூலம் சரிபார்க்கிறேன். எனது வங்கி பாஸ்புத்தகத்தில் ஒவ்வொரு மாதம் என்ட்ரி போடுவேனா என்றால் போடுவேன். அவ்வாறு என்ட்ரி போடும்போது காசோலை செலுத்திய விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5. பாலு எனது வங்கிக்கணக்கில் இரண்டு முறை காசோலையை செலுத்தியுள்ளதாக தெரியவந்ததா என்றால் இல்லை. தற்போது வரை இரண்டு காசோலைகளை பாலு எனது வங்கி கணக்கில் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கள்ளக்குறிச்சி பாரத ஸ்டேட் வங்கியில் தான் எனக்கு வங்கி கணக்கு உள்ளது, அந்த கணக்கில் தான் காசோலை வழங்கியதாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு எண் - 11272375659 என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கில் விவரம் எடுத்தால் காசோலை செலுத்திய விவரம் தெரியும் என்றால் சரிதான், நான் அந்த வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 1 ல் வங்கி கணக்கு விவரப்பட்டியலில் 12.10.2018 அன்று காசோலை திருப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 1 ல் வங்கி கணக்கு விவரப்பட்டியலில் 13.11.2018 அன்று காசோலை திருப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி இரண்டு காசோலைகள் புகார்தாரர் வங்கியில் செலுத்தியது என்றால் புகார்தாரர் செலுத்தினாரா என்று தெரியாது, கோவிந்தசாமி என உள்ளது.

கோவிந்தசாமி இரண்டு காசோலைகளை செலுத்தி ரூ.2,50,000/- எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். 22.11.2018 அன்று மற்றொரு காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2018 ல் மூன்று காசோலைகள் திருப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் கோவிந்தசாமிக்கு எத்தனை காசோலைகள் கொடுத்தேன் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான், எனது கணவர் செக்கியூரிட்டிக்காக கோவிந்தசாமியிடம் காசோலையை கொடுத்தார். கோவிந்தசாமியின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உயர் அதிகாரி என்பதால் எடுக்கவில்லை, நேரில் சென்று பேசினேன். கோவிந்தசாமி எந்த ஆண்டு பணி ஒய்வு பெற்றார் என்றால் நினைவில்லை. கோவிந்தசாமிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் கிடையாது என்றால் சரிதான், எனது கணவர் வாங்கிய பணம் பைசல் ஆகிவிட்டது. பாலுவிடன் வாங்கி கடனை ஏமாற்றுவதற்காக கோவிந்தசாமியிடம் காசோலை கொடுத்ததாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை தவறாக பயன்படுத்தியதாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனையில் இருந்தேன். வழக்கின் காசோலை தொகை நான் கொடுக்கவேண்டியது என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி நான் தண்டிக்கப்படவேண்டியவர் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

Sd/ M.Elavarasi,
Judicial Magistrate No.1, Tindivanam